R4764

## ZIONISM IN PROPHECY
## தீர்க்கதரிசனத்தில் சீயோனிசம்

நமது ஆசிரியர் கடந்த ஜுன் மாதம் “எருசலேம்” என்ற தலைப்பில் ஒரு பிரசங்கத்தை கொடுத்துவிட்டு பாலஸ்தீனாவிலிருந்து திரும்பியதை நமது வாசகரில் அநேகர் அறிவர். இந்த பிரசங்கத்தில் அநேக யூதர்கள் ஈர்க்கப்பட்டார்கள். அவர்களில் அநேகருக்கு ஆவல் எழும்பியது. அந்த பிரசங்கத்தை அநேகர் யூத செய்தித்தாள்களில் வெளியிட்டனர். பிறகு ஆசிரியருடன் நேர்காணல் முதலானவை நடந்தது. முடிவாக நியுயார்க் ஹிப்போடிரோமில் யூதர்கள் மத்தியில் ஒரு செய்தி கொடுக்கும்படி மூன்று தாள்களில் கையெழுத்துடன் கூடிய அழைப்பு கொடுக்கப்பட்டது.

அதன்படி அக்டோபர் 9ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை ஐந்து பிரபலமான எபிரேயர்கள் அடங்கிய ஒரு குழு நமது ஆசிரியரை சந்தித்தது. சகோதரர் ரூதர்போர்டும் உடனிருந்தார். அனைவரும் மோட்டார் காரில் சென்றனர். கூட்டமானது மிகவும் உற்சாகம் அளிக்கக்கூடியதாக இருந்தது. அதில் கலந்து கொண்டவர்கள் நான்காயிரம் பேர் என்று கணக்கிடப்பட்டது. எபிரேயர்கள் இவ்வளவு பேர் நியூயார்க்கில் ஒரே இடத்தில் கூடினதேயில்லை என்று எங்களுக்கு சொல்லப்பட்டது.

சொற்பொழிவு நன்கு ஏற்றுக்கொள்ளப்பட்டது. கூட்டம் முடியும் போது, “யூதர்களின் நம்பிக்கைகளும் வாய்ப்புகளும்” என்ற கைப்பிரதி விநியோகிக்கப்பட்டது. துரதிருஷ்ட வசமாக அதைப் பெற்ற சில யூதர்கள் தங்களை கிறிஸ்தவர்களாக்க முயற்சிக்கப்படுகிறது என்று தவறாக எண்ணினார்கள். அநேக நூற்றாண்டுகளாக கிறிஸ்தவர்களால் குறிப்பாக கத்தோலிக்கர்களால் யூதர்கள் துன்புறுத்தப்பட்டனர். சிலர் விஷயத்தை சரியாக புரிந்து கொண்டனர். மற்றவர்கள் அவமதிப்பாக கருதினர். கடந்த இலையுதிர் காலத்தில் ஆசிரியர் அங்கு இல்லாத சமயத்தில், ஐரோப்பாவில் இருந்த போது அவர் ஒரு “மிஷினரி” என்று கூறப்பட்டு தாக்கப்பட்டார். யூதர்களின் சிந்தை எல்லாம் தவறான கருத்தில் இருந்தது.

நவம்பர் மாதத்தில் ஐரோப்பாவிலிருந்து நாங்கள் திரும்பி வந்த பிறகு, இந்த தவறாக புரிந்துகொள்ளுதலை முடிந்தவரை யூத பத்திரிக்கைகள் மூலமாக சரிபடுத்தினோம். நாங்கள் “மிஷினரி” வேலை செய்து யூதர்களை கத்தோலிக்கராகவோ அல்லது புரட்டஸ்டன்ட் கிறிஸ்தவனாகவோ மாற்ற முயற்சிக்கவில்லை. நாங்கள் இயேசுவை குறித்துக்கூட அவர்களுக்கு போதிக்கவில்லை. யூதர்களுக்கு எங்களது செய்தியானது ஏசாயா 40:1, 2 லிருந்து “என் ஜனத்தை ஆற்றுங்கள்; தேற்றுங்கள்; எருசலேமுடன் பட்சமாய் பேசி, அதன் போர் முடிந்தது என்றும், அதன் அக்கிரமம் நிவர்த்தியாயிற்று என்றும், அது தன் சகல பாவங்களினிமித்தமும் கர்த்தரின் கையில் இரட்டிப்பாய் அடைந்து தீர்ந்தது என்றும், அதற்கு கூறுங்கள்.” யூதர்கள், கிறிஸ்தவர்களாக பாஸ்தீனம் திரும்ப வேண்டும் என்பது எங்கள் எதிர்பார்ப்பு அல்ல என்று நாங்கள் அறிவித்தோம். மாறாக எருசலேமைப் பொருத்தவரை தேவனுடைய அழைப்பும் வாக்குத்தத்தங்களும் மாம்சீக இஸ்ரயேலருக்கான பூமிக்குரிய வாக்குத்தத்தங்கள் ஆகும்.

மிகவும் ஆழமாக கேட்ட சிலருக்கு எங்களது புரிந்து கொள்ளுதலைப் பற்றி நாங்கள் விவரித்து கூறியதாவது: தீர்க்கதரிசனத்தின் மேசியா ஒரு மாபெரும் ஆவிக்குரிய கூட்டம். அதில் ஆங்கிலேயர், பிரஞ்சுகாரர்கள், ஜெர்மனியர்கள, யூதர்கள் முதலானவர்கள அடங்கிய அநேக அங்கங்கள் இருப்பார்கள். தேவன் இந்த மேசியாவின் கூட்டத்தை சகல ஜாதிகளிலும், கோத்திரங்களிலும், ஜனங்களிலும், பாஷைக்காரரிலுமிருந்து பரலோக மகிமைக்கு கூட்டிச் சேர்க்கிறார். அதில் பரிசுத்தமானவர்கள் மட்டுமே இருப்பார்கள். மேலும் நாங்கள் விவரித்து கூறியதாவது: பொதுவாக கிறிஸ்தவர்களும் இன்னும் பொதுவாக யூதர்களும் மேசியாவின் சரீரத்தில் அங்கம் வகிப்பார்கள் என்று நாங்கள் புரிந்து கொள்ளவில்லை. மேலும் யூதர்கள் கிறிஸ்தவ ஜனங்களைப் போல மற்றவர்களுடன் கலக்க மாட்டார்கள் என்பது எங்களது கருத்தாக இருக்கிறது.

அதிலிருந்து அநேக யூத நாளிதழ்கள் நமது கட்டுரைகளை வெளியிட்டார்கள். அதன்பிறகு இன்னும் இரண்டு பெரிய யூத கூட்டங்கள் நடைபெற்றன. இவைகளில் ஒன்று சிகாகோவில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கையை பொருத்தவரை ஏமாற்றத்தை தரக்கூடியதாக இருந்தது. அதில் சனிக்கிழமையாக இருந்தது. அது அவர்களுக்கு அனுகூல மற்றதாக இருந்தது. அநேக யூதர்கள் அதில் கலந்துகொள்ள முடியாததற்கான ஏமாற்றத்தை வெளிப்படுத்தினார்கள். அது அவர்களது பிரதான வியாபார நாளாக இருந்தது. எனினும் கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கை ஆயிரத்து ஐநூறாக இருந்தது; நன்றாக கவனம் செலுத்தினார்கள்.

எங்களுடைய கடைசி கூட்டம் பிலதெல்பியாவில் நடந்தது. அது மதசார்பற்ற அச்சகங்கள் மூலம் விளம்பரப்படுத்தவில்லை. வேறு வார்த்தைகளில் சொல்வோமானால் அது ஒரு யூத கூட்டமாக இருந்தது. கேரிக் தியேட்டரை முழுமையாக நிரம்பி முந்நூறுபேர் நின்று கொண்டிருந்தார்கள். போலீசும் தீயணைப்பு படையினரும் மேலும் வருகிறவர்களை தடுத்ததினால் அநேகர் ஏமாற்றம் அடைந்து நூற்றுக்கணக்கானவர்கள் திரும்பிச் சென்றனர். அந்த கூட்டமானது யூத ஜனங்களும் மிகவும் உற்சாகத்தை கொடுக்கக்கூடியதாக இருந்தது. இப்படியாக ஆசிரியர் மேல் அவர்களது நம்பிக்கை வளர்ந்தது. இந்த விஷயம் அரசியல் விதமாக இல்லாததால் சீயோனிலும் தீர்க்கதரிசன கருத்தில் யூத இருதயங்களை தூண்டியதாக காணப்பட்டது.